
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 229 | 4 Pages | 17.3.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 229 | 4 பக்கங்கள் | 17.3.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு

**விளக்கம்:**
உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

## ராகுல் காந்தி அடிக்கடி வியட்நாம் செல்வது ஏன்? பாஜக கேள்வி



புதுடெல்லி, மார்ச்.17

மக்களவைஎதிர்க்கட்சித்தலைவரும்,காங்கிரஸ்மூத்ததலைவருமான ராகுல் காந்தி தனிப்பட்ட பயணமாக வியட்நாம் சென்றுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. கடந்த ஆண்டு இறுதியிலும் அவர் அந்த நாட்டுக்கு சென்றிருந்தார். இவ்வாறு 3 மாத இடைவெளியில் 2 முறை ராகுல் காந்தி வியட்நாம் சென்றது ஏன்? என பா.ஜனதா கேள்வி எழுப்பி உள்ளது.

இது தொடர்பாக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான ரவிசங்கர் பிரசாத் கூறியதாவது: ராகுல் காந்தி எங்கே? அவர் வியட்நாம் சென்றிருப்பதாக அறிந்தேன். புத்தாண்டிலும் அவர் வியட்நாமில்தான் இருந்தார். அப்போது சுமார் 22 நாட்களை அங்கே செலவிட்டார்.

இத்தனை அதிக நாட்களை தனது தொகுதியில் கூட அவர் செலவழித்ததில்லை. அப்படி தனது தொகுதியை விட வியட்நாம் மீது திடீரென அவருக்கு இவ்வளவு அதிக பாசம் ஏற்படுவதற்கான காரணம் என்ன? ராகுல் காந்தி வியட்நாம் மீது கொண்டுள்ள அசாதாரண பிணைப்பை விளக்க வேண்டும். அடிக்கடி அவர் அந்த நாட்டிற்கு பயணம் மேற்கொள்வது சுவராசியமாக உள்ளது. ராகுல் காந்தி, நாட்டின்எதிர்க்கட்சித்தலைவர்.அவர்இந்தியாவில்இருக்கவேண்டும். இவ்வாறு ரவிசங்கர் பிரசாத் கூறினார்.

ராகுல் காந்தியின் வெளிநாடு பயணங்களை பா.ஜனதா அடிக்கடி விமர்சித்து வருகிறது. கடந்த ஆண்டு இறுதியில் அவர் வியட்நாம் சென்றபோதும் ஆளும் கட்சியினர் கடுமையாக விமர்சித்தனர்.

குறிப்பாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இறப்பால் நாடு முழுவதும் துக்கம் அனுசரித்தபோது ராகுல் காந்தி வெளிநாடு சென்றதை பா.ஜனதாவினர்கடுமையாக குற்றம்சாட்டினர். அதேநேரம் ராகுல் காந்தியின் தனிப்பட்ட பயணத்தை பா.ஜனதா அரசியலாக்குவதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. தனிநபர் ஒருவருக்கு வெளிநாடு செல்ல அனைத்து உரிமையும் உண்டு என்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

## உத்தரபிரதேசம்: ஆற்றில் படகு கவிழ்ந்து 3 பேர் பலி



லக்னோ, மார்ச்.17

உத்தர பிரதேசம் மாநிலம் சீதாப்பூரில் ரத்தன் கஞ்ன் கிராமம் உள்ளது. இதனருகே சாரதா ஆறு பாய்ந்தோடுகிறது. ஹோலி பண்டிகை கொண்டாட்டத்திபோது 22 வயது வாலிபர் ஒருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தார். அவருக்கு இறுதிச்சடங்கு செய்வதற்காக அதே ஆற்றில் வாலிபரின் உறவினர்கள் மற்றும் கிராமத்தினர் பரிசல் படகுகளில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அதிக பாரம் காரணமாக பரிசல் நடு ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 3 பேர் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 2 வயது குழந்தை உள்பட நீரில் மூழ்கி தத்தளித்த 16 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

## மத்திய அரசின் பத்ம விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

நாட்டின் உயரிய விருதுகளான பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ ஆகிய விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படும். கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல், பொறியியல், பொது விவகாரங்கள், சிவில் சேவை உள்ளிட்ட துறைகளில் சிறந்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இனம், தொழில், பதவி, பாலினவேறுபாடின்றி அனைத்து நபர்களும் இந்த விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த நிலையில் 2026ம் ஆண்டுக்கான விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை நேற்று தொடங்கியது. ஜூலை 31ந் தேதி வரை விண்ணப்பிக்கலாம். தேசிய விருதுகள் இணையதளமான https://awards.gov.in என்ற தளத்தில் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

இது தொடர்பான விரிவான விவரங்கள் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணையதளமான https://mha.gov.in மற்றும் பத்ம விருதுகளுக்கான இணைய தளமான https://padmaawards.gov.in என்ற தளத்திலும்உள்ளன.விருதுகள்தொடர்பானவிதிகள்இணையதளத்தில் https://padmaawards.gov.in/AboutAwards.aspx என்ற இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த தகவல்களை உள்துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

# 'திராவிட இயக்க படைப்பாளியாக அடையாளப்படுத்திக் கொண்டவர் வைரமுத்து' : முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மாச்.17

கவிஞர்வைரமுத்துவின்படைப் புலகம் குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது.

இதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு மட்டுமின்றி தமிழுக்கும், தமிழ் கவிதைக்கும், இலக்கியத்திற்கும் பெருமை சேர்க்கக்கூடிய நிகழ்வு இது. இலக்கியத்தின் எல்லா வடிவங்களிலும் நுழைந்து வெற்றிமுகம் கண்டவர் வைரமுத்து. சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை 7 முறை பெற்ற ஒரே பாடலாசிரியர்.

தமிழ்நாடு அரசின் சிறந்த பாடலாசிரியர் விருதை 6 முறை பெற்றிருக்கிறார். இதுவரை 7,500க்கும்



மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கிறார். 39 நூல்களை எழுதியுள்ளார். சாகித்ய அகாடமி விருது பெற்ற இவரது 'கள்ளிக்காட்டு இதிகாசம்' நாவல் இதுவரை 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திரைத்துறையில் உயர்ந்த பிறகும், தேசிய விருதுகளை பெற்ற பிறகும் தன்னை திராவிட இயக்க படைப்பாளியாக அடையாளப்படுத்திக்கொண்டவர்வைரமுத்து."

இவ்வாறு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## மதுரை ஒரு அங்கமாக தேர்த்தெடுத்து பள்ளி மாணவர்கள் கலந்தாய்வு கூட்டம்

மதுரை மாநகர் சொக்கிகுளம் பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலில் New Zealand Education fair என்ற தலைப்பில் திருவாளர் ஆலிடே அருண் அவர்கள் முயற்சியில் மதுரை ஒரு அங்கமாக தேர்த்தெடுத்து பள்ளி மாணவர்கள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாணவர்களின் எதிர்கால கனவு வாழ்க்கையை கருத்தில் கொண்டு அவர்கள் அனைத்து துறையில் முன்னேற்றம் அடைய பயிற்சியும் ஆலோசனையும் கல்வி பயில மற்றும் வெளிநாடு சென்று பணிபுரிய, மூன்று மாவடி கனரா வங்கியின் மூலம் Retail Asset Hub நிறுவனம்





Deputy General manager பாக்ய ரேகா, அனைத்து மாணவர்களுக்கும் உதவி செய்து வருகிறார்கள் இப்பயிற்சி வகுப்பில் சுமார் 200 க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர் மேலும் இதில் RAH Divisional Manager. G. Hul theppa சீனியர் மேனேஜர் M. பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு உயர் கல்வி அவசியத்தியும் வாழ்க்கை நெறிமுறைகளை .. பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர் மேலும் கல்வி கடன் பெற Pan கார்டு, ஆதார் கார்டு சிறிய அளவில் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ. அட்மிஷன் ஆப்பர் கடிதம் வருமான சான்றிதழ் (அரசு துறை அதிகாரிகள் ) ஆவணங்கள் வழங்கி தேவையான கல்வி கடன் பெற்று கொள்ளலாம் என தெரிவித்துள்ளனர்

## அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டி

அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வருகிறது. வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி மூர்த்தி அவர்கள் காலை 7:00 மணியளவில் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

ஜல்லிக்கட்டுபோட்டியைமாவட்ட ஆட்சித்தலைவர்திருமதி மா சௌசங்கீதா இஆப அவர்கள், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு ஆ வெங்கடேசன் அவர்கள், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி சங்கீதா ஆகியோர் பார்வையிட்டனர்.

மதுரை மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1000 காளைகள், 650 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

களத்தில் நின்று விளையாடும் காளையின் உரிமையாளருக்கும்,

காளைகளைதழுவும் வீரர்களுக்கும் சைக்கிள், மிக்ஸி, மெத்தை, சில்வர் அண்டா உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பொதுமக்கள்கலைஞர்நூற்றாண்டு ஏறு தழுவுதல் மைதானத்தில் கண்டு ரசிக்க பேருந்து நிலையத்தில் இருந்து சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்



பட்டு உள்ளது.

பொதுமக்களின் பொழுபோக்கு நிகழ்வாக ஜல்லிகட்டு பேட்டி இடையே DJ இசை நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வாகனங்களில் வரும் ஜல்லிக்கட்டு மாடுகளை கொண்டு வருபவர்களுக்கு முறையான அறிவிப்புகளை வழங்கி வருகின்றனர்.

கால்நடை மருத்துவர்கள் காளைகளை சோதனைகள் செய்து அனுமதி அளித்து வருகின்றனர்.

பொது சுகாதார துறை மருத்துவர்கள் தயார் நிலையில் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தோட்ட வீடுகளை கண்காணிக்க ஆயுதம் ஏந்திய 25 வாகன ரோந்து குழு: திருப்பூர் எஸ்.பி. தகவல்

திருப்பூர், மார்ச்.17

காங்கயம்பல்லடம் பகுதியில் உள்ளகுடியிருப்புகள்மற்றும்தோட்ட வீடுகள் உள்ள பகுதிகளை கண்காணிக்க 25 ஆயுதம் ஏந்திய இருசக்கர ரோந்துக் குழுவினர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளதாக, திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரீஷ் யாதவ் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அவிநாசிபாளையம் காவல் எல்லைக்கு உட்பட்ட சேமலைக்கவுண்டம் பாளையத்தில் கடந்த நவம்பர் மாதம் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



எனது தலைமையில் 8 சிறப்புப் படைகள் அமைக்கப்பட்டு, குற்றவாளிகளை கண்டுபிடிக்க கடுமையாக பணியாற்றி வருகிறோம். குற்றத்தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக திருப்பூர் காவல் துறையால் மாவட்டம் முழுவதும் சுமார் 14 ஆயிரம் கண்காணிப்பு கேமராக்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

குறிப்பாக 5,012 கேமராக்கள் குடியிருப்புகள் மற்றும் தோட்ட வீடுகள் உள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. குடியிருப்புகள் மற்றும் தோட்ட வீடுகள் உள்ள பகுதிகளை கண்காணிக்க காங்கயம்பல்லடம் பகுதிக்கு 25 ஆயுதம் ஏந்திய இருசக்கர ரோந்து குழுவினர் தனியாக நியமிக்கப்பட்டு, கண்காணித்து வருகின்றனர், என்றார்.

## ரயிலில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு



தமிழகத்தில் பெண்கள் எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவம் நாள்தோறும் நிகழ்ந்து வருகிறது. இதனை தொடர்ந்து ரயிலில் பயணம் செய்யும் பெண் பயணிகளிடம் பாலியல் சீண்டல் சம்பவத்தை தடுக்கும் வகையில் தமிழ்நாடு ரயில்வே காவல் துறை சார்பில் பாதுகாப்பு பெண்கள் பாதுகாப்பு குழு துவக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஈரோடு ரயில் நிலையத்தில் பெண்கள் பாதுகாப்பு குழு துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கோவை உட்கோட்ட ரயில்வே காவல்துறை துணை கண்காணிப்பாளர் பாபு கலந்து கொண்டார். தொடர்ந்து ரயில் மூலம் பயணம் செய்யும்தமிழகம் மற்றும் வட மாநிலத்தை சேர்ந்த பெண்கள் மத்தியில் பெண்கள் பயண பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் பெண்கள் பாதுகாப்பு குழுவின் நடவடிக்கைகள் குறித்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து பெண்கள் இரவில் பயணம் செய்யும் போது அடையாளம் தெரியாத தனிநபரிடம் தகவல் பரிமாற்றம் செய்யக்கூடாது கொடுப்பதை வாங்கி சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தினார். மேலும் பெண்கள்பயணத்தின்போது இடையூறு செய்யும் நபர்கள் குறித்து கண்காணிக்க பெண் காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், இதில் 1512 , 139 இலவச தொடர்பு எண் குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைச்சர் முன்னிலையில் சமுதாய வளைகாப்பு விழா

சமுதாய வளைகாப்பு மாவட்ட ஆட்சியர் ஷே. ஷேக் அப்துல் ரகுமான் தலைமையில் அமைச்சர் கா பொன்முடி முன்னிலையில் விழா நடைபெற்றது

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த



குழந்தைவளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா மாவட்ட ஆட்சியர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் அமைச்சர் க. பொன்முடி முன்னிலையில் நடைபெற்றது விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா. லட்சுமணன், அன்னியூர்சிவா, நகர மன்ற தலைவர் தமி ழ்ச்செல்வி பிரபு, மாவட்ட ஊரா ட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பழனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

தினகனி





சென்னை மதுரவாயல் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம், மண்டலம்11ல் மீண்டும் மஞ்சப் பை தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரத்தை சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் க. கணபதி மக்கள் பயன்பாட்டிற்கு துவங்கி வைத்தர். இந்நிகழ்வில் மண்டலம்11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தொழிலதிபர் வீரையன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி மாதவன், சாந்தி ராமலிங்கம், கிரிதரன்,வட்டக் கழகச் செயலாளர்கள் அ.மோசஸ்,ரூபன், வினோத்,முருகன், செல்வம் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# மின் கம்பத்தில் தேன் கூடு: ருசிக்க சென்ற கரடி மின்சாரம் தாக்கி பலி

நீலகிரி, மார்ச்.17

நீலகிரி மாவட்டம் குன்னூரில் அருகே சமீப காலமாக கரடிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. இந்த கரடிகள் குறிப்பாக உணவு மற்றும் தண்ணீர் தேடி குடியிருப்பு பகுதிகளில் சர்வ சாதாரனமாக உலா வருகிறது. இதனால் தேயிலை தோட்டத்தில் வேலை செய்து வருபவர்கள் அச்சத்தில் உள்ளனர்



இந்த நிலையில் நான்செட் பகுதியில் உள்ள வரதராஜன் என்பவரின் வீட்டிற்கு அருகே கரடி ஒன்று சுற்றித்திரிந்தது. அப்போது அங்கு ஒரு மின் கம்பத்தின் மேல் தேன் கூடு இருப்பதை பார்த்த கரடி மின்கம்பத்தில் ஏறியது.

தேனை ருசிக்க சென்ற கரடியின் உடல் மின்கம்பியில் உரசி மின் சாரம் தாக்கி கீழே விழுந்து பரிதாபமாக உயிரிழந்தது.

இது குறித்து தகவலறிந்த வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று கரடியின் உடலை மீட்டனர். பிரேத பரிசோதனை செய்யப்பட்டு பின்னர் கரடியின் உடலானது தகனம் செய்யப்பட்டது.

மேலும் இது 5 வயது மதிக்கத்தக்க ஆண் கரடி என தெரியவந்துள்ளது. தேனை ருசிக்க வந்த கரடி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாகனம் நிறுத்துமிடம் விரிவாக்கம்

சென்னை, மார்ச்.17

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாகனம் நிறுத்துமிடத்தில் வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;



"திருமங்கலம் மெட்ரோ நிலையத்தின் துணை கட்டிடத்திற்கு அருகில் தற்போதுள்ள B2 வாகன நிறுத்தும் பகுதியில் கூடுதலாக ஒரு தளம் வாகன நிறுத்தும் (Mezza nine level parking) இடமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதுப்பிக்கப்பட்ட வாகனம் நிறுத்துமிடத்தில் கூடுதலாக 400 இருசக்கர வாகனங்களை நிறுத்த முடியும்.

தற்போது, திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தின் B2 வாகனம் நிறுத்துமிடம் 1,000 இருசக்கர வாகனங்களை நிறுத்தும் வசதியைக் கொண்டுள்ளது. இந்த புதிய விரிவாக்கம் பயணிகளுக்கு கூடுதல் வசதியை வழங்கி, மெட்ரோ சேவையை மேலும் எளிமையாகவும் திறம்படவும் பயன்படுத்த ஊக்குவிக்கும்.

மேம்படுத்தப்பட்ட இந்த வாகன நிறுத்துமிடத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை ஆலோசகர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) பி.கோபிநாத் மல்லியா திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் ஆலோசகர் (மின்சாரம் மற்றும் இயந்திரவியல்), எஸ்.கே.நடராஜன், கூடுதல் பொது மேலாளர் (மெட்ரோ ரெயில் மற்றும் இயக்கம்) எஸ்.சதீஷ் பிரபு மற்றும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக வெற்றிக் கழக நிர்வாகி மாரடைப்பால் மரணம்: விஜய் இரங்கல்

சென்னை, மார்ச்.17

தமிழக வெற்றிக்கழகத்தின் 2ம் ஆண்டு தொடக்க விழா சமீபத்தில் மாமல்லபுரத்தில் நடந்தது. இந்த விழாவுடன் சேர்த்து பொதுக்குழு கூட்டத்தை கூட்ட திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் நிர்வாகிகள் நியமனம் தாமதம் தொடர்பாக பொதுக்குழு கூட்ட தேதி தள்ளிப்போனது. கட்சியில் 120 மாவட்ட செயலாளர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டு, தற்போதுவரை 114 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதுதவிர மாநில நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில், கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் வருகிற 28ந்தேதி நடக்கிறது.





இந்த பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் நியமனத்திற்கு ஒப்புதல் பெறப்படுகிறது. கட்சியின் சட்ட திட்ட விதிகள் அறிவிக்கப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது. கட்சியின் செயல்பாடு, கூட்டணி நிலைப்பாடு குறித்து நிர்வாகிகளிடம் விஜய் கருத்து கேட்க இருக்கிறார். இந்த கூட்டத்தில் செயற்குழு, பொதுக்குழு, மாநில, மாவட்ட நிர்வாகிகள் என 2,500 பேர் பங்கேற்க இருக்கிறார்கள். கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதற்கான அறிவிப்பு நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் திருநெல்வேலி வடக்கு மாவட்ட செயலாளர் சஜி மாரடைப்பால் காலமானதாக தகவல் வெளியாகி உள்ளது. கட்சி பணிகளுக்காக சென்னை சென்றிருந்த நிலையில், மாரடைப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தநிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருநெல்வேலி வடக்கு மாவட்ட செயலாளர் சஜி மறைவுக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தமிழக வெற்றிக்கழகத்தின் திருநெல்வேலி வடக்கு மாவட்டச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வந்த அன்பிற்குரிய சகோதரர் திரு. சஜி (எ) B.அந்தோணி சேவியர் அவர்கள் காலமானது, மிகுந்த அதிர்ச்சியையும் மன வேதனையையும் அளிக்கிறது.

என் மீதும் கழகத்தின் மீதும் அளவற்ற அன்பு கொண்டு கழகப் பணியாற்றி வந்தவர். அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 7,783 அங்கன்வாடி பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்ப அனுமதி: தமிழக அரசு

சென்னை, மார்ச்.17

இது தொடர்பாக, தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது,

சமூக நலன் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் துறை ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் அங்கன்வாடி பணியாளர், மினி அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் நியமனத்திற்கான திருத்தப்பட்ட / ஒருங்கிணைந்த தகுதி அளவுகோல்கள் 7,783 அங்கன்வாடி பணியாளர் / மினி அங்கன்வாடி பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப அனுமதி அளிக்கப்படுகிறது என்றார்.

# தி.மு.க. ஆட்சியில் எத்தனை பேருக்கு அரசு வேலை? யார் சொன்னது சரி? அன்புமணி ராமதாஸ் கேள்வி

சென்னை மார்ச்.17

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளில் எவ்வளவு பேருக்கு அரசு வேலை வழங்கப்பட்டிருக்கிறது என்பது தொடர்பாக நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள விவரங்களுக்கும், சில மாதங்களுக்கு முன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட புள்ளிவிவரங்களுக்கும் இடையே மிகப்பெரிய முரண்பாடு நிலவுகிறது. வேலைவாய்ப்பு குறித்த புள்ளிவிவரங்களை வெளியிடுவதில் தி.மு.க. அரசு எந்த அளவுக்கு மோசடி செய்கிறது என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு ஆகும்.



நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் தங்கம் தென்னரசு,"அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு அரசுத் துறைகளில் இதுவரை 57,016 அரசுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இது தவிர, பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வாயிலாக 21,866 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்" என்று கூறியிருந்தார்.

அமைச்சர் வெளியிட்ட புள்ளி விவரங்களில் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நிரந்தரப் பணியாளர்கள் ஆவர். உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக தேர்வு செய்யப்பட்டவர்கள் தற்காலிக, ஒப்பந்தப் பணியாளர்கள் ஆவர். இவர்களின் பணி நிலை குறித்த துல்லியமான விவரத்தை வெளியிடும்படி பா.ம.க. பலமுறை வலியுறுத்தியும் தமிழக அரசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

தி.மு.க. அரசு பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைந்திருந்த நிலையில், கடந்த ஆண்டு ஜூன் 25ம் தேதி தமிழக சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் பேசிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் வாயிலாக 32 ஆயிரத்து 774 பேருக்கு பல்வேறு அரசுத் துறைகளில் நேரடிப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன. அதேபோல், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளில் 32 ஆயிரத்து 709 இளைஞர்கள் பணிநியமனம் பெற்றனர். மொத்தம் 65 ஆயிரத்து 483 இளைஞர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது" என்று கூறியிருந்தார்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததற்கு பிந்தைய 8 மாதங்களில் அரசுத் துறைகளில் வேலை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்திலிருந்து 78 ஆயிரமாக உயர்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது. அதை மறுக்கவில்லை. ஆனால், கடந்த 8 மாதங்களில் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 13 ஆயிரம் மட்டுமே உயர்ந்துள்ள நிலையில், அரசுத் தேர்வு முகமைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வாறு 25 ஆயிரம் உயர முடியும்?

அதேபோல், மொத்தப் பணியாளர் எண்ணிக்கை உயரும் போது உள்ளாட்சிகள் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயர வேண்டும் அல்லது அதே எண்ணிக்கையில் இருக்க வேண்டும். ஆனால், அவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 709லிருந்து 21,866 ஆக 11 ஆயிரம் பேர் குறைந்தது எப்படி?

அதேபோல், வரும் நிதியாண்டிற்குள் மேலும் 40 ஆயிரம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடப்பாண்டில் 7 பணிகளுக்கு மட்டும் தான் ஆட்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால் அந்த 7 பணிகளுக்கும் சேர்த்து மொத்தம் 10 ஆயிரம் பேர் கூட தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு இருக்கும் போது 40 ஆயிரம் பேரை எவ்வாறு தேர்வு செய்ய முடியும்?

ஐந்தரை லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தி.மு.க., அதில் 10 சதவீதத்தினருக்கு கூட வேலை வழங்காததை மறைப்பதற்காக பொய்யான புள்ளி விவரங்களை வெளியிட்டு மக்களை ஏமாற்றப்பார்க்கிறது. அரசு வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினும், அமைச்சர் தங்கம் தென்னரசும் தெரிவித்த புள்ளி விவரங்கள் முன்னுக்குப் பின் முரணாக இருக்கும் நிலையில், இருவரில் யார் சொன்னது சரி? என்பது குறித்து தமிழக அரசு விளக்கம் அளிக்க வேண்டும். தமிழகத்தில் இது வரை வழங்கப்பட்ட அரசு வேலைகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருப்பூரில் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்

கழக காவல் தெய்வங்களின் நல்வழியில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு எதிர்க்கட்சி கொறடா, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர், கழக தலைமை நிலைய செயலாளர் மாண்புமிகு அண்ணன் திரு S.P. வேலுமணி அவர்கள் அறிவுறுத்தலின்படி திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டச் கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு C. மகேந்திரன் M.A,MLA அவர்களின் ஆலோசனைப்படி



மாவட்ட கழக பொருளாளர் சின்னப்பன் (எ) பழனிசாமி முன்னிலையில்தராபுரம் நகர கழக செயலாளர் அண்ணன் திரு C ராஜேந்திரன் B.E., அவர்களின் தலைமையில் ★வேல்முருகன் திருமண மண்டபத்தில் இன்று பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது இந்நிகழ்வில் அனைத்து மாவட்ட அம்மா பேரவை செயலாளர் திரு. சின்னமணி (எ) மோகன்ராஜ் அவர்கள், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் திரு குப்புசாமி அவர்கள், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் திரு கோகுல்ராஜ் அவர்கள், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் திரு பங்க் மகேஷ் அவர்கள் மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் திரு அரசகுமாரன் அவர்கள் அண்ணா தொழிற்சங்க தலைவர் திரு பழனிக்குமார் அவர்கள், மாவட்ட மாணவர் அணி துணைச் செயலாளர் திரு ஜாகீர் அப்பாஸ் அவர்கள், இளைஞர் அணி செயலாளர் திரு தினேஷ் அவர்கள், மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு நகர செயலாளர் திரு. திலீப் ஸ்ரீனிவாசன் அவர்கள் மற்றும் மாவட்ட கழக, நிர்வாகிகள்,நகரக் கழக ஒன்றிய கழக, செயலாளர்கள் ,நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட,நகர, ஒன்றிய செயலாளர்கள்நிர்வாகிகள், வார்டு கழக , கிளை கழக செயலாளர்கள்நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் , வீராங்கனைகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் அணி திரளாக கலந்து கொண்டனர்..

# ஆவடி திருவேற்காடு பாஜகவிற்கு இன்னும் தமிழர்களின் குணம் புரியவில்லை: நாஞ்சில் சம்பத் பேச்சு

ஆவடி, மார்ச்.17

ஆவடி திருவேற்காடு பாஜகவிற்கு இன்னும் தமிழர்களின் குணம் புரியவில்லை, நாஞ்சில் சம்பத் பாஜகவிற்கு தமிழர்களின் குணம் இன்னும் புரியவில்லை என்றும் இந்திய துணிக்கமை என்றால் பாஜகவை தமிழகத்தில் இருந்து மக்கள் துடைத்து எறிவார்கள் என்றும் திராவிட பேச்சாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார். சென்னையை அடுத்த திருவேற்காடு பகுதியில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.திமுக திருவேற்காடு நகர செயலாளர் தலைவர் என்.இ.கே.



மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் நாசர், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி மற்றும் திராவிட பேச்சாளர் நாஞ்சில் சம்பத், தலைமை செயற்குழு உறுப்பினர் ரமேஷ், மத்திய மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ ஜே பவுல்,நூம்பல் ஆசைத்தம்பி, சங்கர், ராஜி, சுதாகர், சுரேஷ், நாராயணன், நரேஷ் உள்ளிட்ட ஏராளமானூர் கலந்து கொண்டனர். விழா மேடையில் பேசிய நாஞ்சில் சம்பத், பாஜகவிற்கு எதிராக இந்திய அளவில் சித்தாந்தங்களை உருவாக்குவது மு.க. ஸ்டாலின் தான் என புகழாரம் சூட்டினார். பாஜகவிற்கு தமிழர்களின் குணம் இன்னும் தெரியவில்லை என்றும், தமிழக மக்களிடம் இந்தியை திணிக்க முயன்றால் அவர்கள் பாஜகவை புறம் தள்ளி விடுவார்கள் என குறிப்பிட்டார். தமிழக கல்வி நிதியான 2000 கோடியை விடுவிக்க வேண்டும் என்றால் அதற்கு புதிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும் என மு க ஸ்டாலினை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் நிர்பந்தம் செய்ததாக கூறினார்.

ஆனால் பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் புதிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் என பதில் அளித்து தர்மேந்திர பிரதான் கன்னத்தில் அறைந்தார் போல முதலமைச்சர் ஸ்டாலின் கூறியதாக சுட்டி காட்டினார். அனைவருக்கும் கவுன்சிலர் இளங்கோவன் நன்றி கூறினார்.

# சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற தொழிலாளி கைது


திருச்சி , மார்ச்.17

திருச்சி மாவட்டம் பெரிய கருப்பூர் பகுதியைச் சேர்ந்தவர் நடராஜன் (வயது 40). கூலித் தொழிலாளி. இவர் 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக கூறப்படுகிறது. இது குறித்த புகாரின் பேரில் குளித்தலை அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து நடராஜனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொளத்தூர் அருகே சாலையில் மகளுடன் நடந்து சென்ற பெண்ணை முட்டி தூக்கி வீசிய மாடு: பதற வைக்கும் வீடியோ வைரல்

அம்பத்தூர், மார்ச்.17

கொளத்தூர் அருகே சாலையில் மகளுடன் நடந்து சென்ற பெண்ணை பசுமாடு ஆக்ரோஷமாக முட்டிதூக்கிவீசியவீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் சாலையில் திரியும் மாடுகள் முட்டுவது, தெரு நாய்கள் கடித்தும் பொதுமக்கள் படுகாயமடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. சாலைகளில் மாடுகள் சண்டை போட்டு, வாகனங்களுக்கு குறுக்கே ஓடுவதால், விபத்துகளுக்கு காரணமாகின்றன. இதில், பலர் படுகாயமடைந்துள்ளனர். சில்ர பலியாகியுள்ளனர். மேலும், மாடுகள், நடந்து செல்வோரை முட்டி வீசும் சம்பவங்களும் நடந்து வருகின்றன.



குறிப்பாக, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மாடு தாக்கி நங்கநல்லூரைச் சேர்ந்த ஒருவர் இறந்தார். ஜூன் மாதம் மாடு முட்டி திருவொற்றியூரில் ஒரு பெண் படுகாயமடைந்தார். திருவல்லிக்கேணியில் மாடு முட்டி முதியவர் இறந்தார். இதேபோல், வண்ணாரப்பேட்டையில் மூன்றாவது படிக்கும் பத்து வயது சிறுவனை தெரு நாய் கடித்துக் குதறியதில் அந்தச் சிறுவனின் இடது பக்கத் தோள்பட்டையில் பலத்த காயமடைந்தான். மேலும் பெண் ஒருவரை எருமை மாடு முட்டித் தள்ளியது. இதே போல், பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சி தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டதோடு மாடுகளைப் பிடித்து அபராதம் விதிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

ஆனாலும் மாட்டின் உரிமையாளர்கள் கண்டு கொள்வதாக தெரியவில்லை. இதனால், சாலைகளில் சுற்றித் திரியும் மாடுகளால் பல அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் கொளத்தூர் பகுதியில் சாலையில் மகளுடன் நடந்து சென்ற பெண்ணை மாடு முட்டிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னை கொளத்தூர் பாலாஜி நகரில் நேற்று ஒரு பெண் தனது மகளுடன், அருகில் உள்ள மளிகை கடைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அதே சாலையில் கன்றுக் குட்டியுடன் வந்த பசுமாடு ஒன்று, திடீரென தாய் மகள் மீது ஆக்ரோஷமாக பாய்ந்தது. சுதாரித்துக்கொண்ட பெண், தனது மகளை மாடு முட்டாமல் இருக்க பத்திரமாக பிடித்துக்கொண்டார். அப்போது, அந்த மாறு தாயை முட்டி தூக்கி வீசியது. பின்னர் அப்பகுதி மக்கள் மாட்டை விரட்டியடித்து தாய் மகளை மீட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மாநகராட்சி அதிகாரிகள், சாலையில் சுற்றித்திரிந்த பசுவை பிடித்து வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். இது போன்று சாலையில் சுற்றி திரியும் மாடுகள் பொது மக்களை தாக்கக்

கூடிய சம்பவம் அதிகரித்து வருகிறது. இதற்கு மாநகராட்சி அதிகாரிகள் மாட்டின் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மகளுடன் சாலையில் நடந்து சென்ற பெண்ணை மாடு முட்டி தள்ளும் காட்சி சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் தீ விபத்து

தூத்துக்குடி, மார்ச்.17

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1 வது யூனிட்டில் நள்ளிரவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. குளிருட்டும் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான மின் கம்பிகள் எரிந்து நாசமாகியது. நெல்லையிலிருந்து கூடுதல் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# சமூக ஒற்றுமையை கடைபிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து தலா ரூ.1 கோடி ஊக்கதொகை: எஸ்சி, எஸ்டி பணியாளர் சங்கம் வரவேற்பு

சென்னை, மார்ச்.17

தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித்துறை டாக்டர் அம்பேத்கர் எஸ்சி, எஸ்டி பணியாளர் நலச் சங்கம் பொதுச்செயலாளர் டாக்டர் டி.மகிமைதாஸ் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு பட்ஜெட்டில் உயர்கல்வித்துறைக்கு ரூ.8,494 கோடி ஒதுக்கீடு, சாதிபாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தையும் சமூக ஒற்றுமையினையும் கடைபிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து கவுரவிக்கும் வகையில், தகுதி படைத்த ஊராட்சிகளுக்கு தலா ரூ.1 கோடி ஊக்கத் தொகையுடன் கூடிய சமூக நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள் வழங்கப்படும். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைகளுக்கு ரூ.572 கோடி ஒதுக்கீடு, பெற்றோரை இழந்த குழந்தைகள் படிப்பை தொடர மாதம் 2 ஆயிரம் உதவித்தொகை, மாணவர்கள் விரும்பும் பாடப்பிரிவுகளில் கூடுதலாக 15 ஆயிரம் இடங்கள், சமக்ர சிக்ஷா திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி தரவில்லை என்றாலும் தமிழக மாணவர்களின் கல்வியில் ஒரு துளிகூட பாதிப்பு இருக்காது. கல்லூரி மாணவர்களுக்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும். அரசு பள்ளிகளில் 2562 ஆசிரியர்கள் நியமனம். புதிய வரிகள் ஏதுமற்ற, அனைவரும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ள இப்பட்ஜெட்டை வரவேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்து கொள்கிறோம்.

# சென்னை: 9வது மாடியில் இருந்து குதித்து ஆசிரியை தற்கொலை

சென்னை, மார்ச்.17

சென்னைமந்தைவெளி, திருவேங்கடம் தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்தவர் மாளவிகா (38 வயது). இவர், அபிராமபுரம் பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வந்தார். மாளவிகாவுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அவருக்கு அவரது பெற்றோர் மாப்பிள்ளை தேடி வந்தனர். ஆனால், திருமணத்தில் அவருக்கு விருப்பம் இல்லை என தெரிகிறது. இதனால் பெற்றோர் மாப்பிள்ளை பார்ப்பதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். ஆனாலும் அவருடைய பெற்றோர் மாளவிகாவுக்கு தொடர்ந்து வரன் தேடி வந்தனர். இதனால் அவர் சோகத்துடன் காணப்பட்டார். மாளவிகா வழக்கம்போல் நடைபயிற்சி சென்றுவிட்டு வீட்டுக்கு திரும்பினார். திடீரென அந்த அடுக்குமாடி கட்டிடத்தின் 9வது மாடிக்கு சென்ற மாளவிகா, அங்கிருந்து கீழே குதித்தார். இதில் பலத்த காயமடைந்த அவர், ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார். அதிர்ச்சி அடைந்த அக்கம், பக்கத்தினர் மாளவிகாவை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்குபரிசோதனைசெய்த மருத்துவர்கள், மாளவிகா வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மயிலாப்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆசிரியை மாளவிகா தற்கொலைக்கு வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளதா? என பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர்.

# வரும் 31ம் தேதி அமித்ஷா கன்னியாகுமரி வருகை? பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு



கன்னியாகுமரி, மார்ச்.17

ஒன்றிய உள்துறை அமைச்சர்அமித்ஷாவரும் 31ம் தேதி கன்னியாகுமரி வர உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மத்திய தொழிற்பாதுகாப்பு படை (சி.ஐ.எஸ்.எப்.) 56 வது உதய தினத்தையொட்டி குஜராத் மாநிலம் லக்பத் கோட்டை மற்றும் மேற்கு வங்க மாநிலம் பக்காளி கடற்கரையில் இருந்து கடல் வளத்தை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் உள்ள மத்திய தொழில் பாதுகாப்பு படையின் மண்டல பயிற்சி மையத்தில் கடந்த 7ம் தேதி நடந்த நிகழ்ச்சியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைத்தார். ராணிப்பேட்டையில் இருந்தவாறு காணொலி மூலம் இந்த பேரணியை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைத்தார். இந்த பேரணியில் 14 பெண் வீரர்கள் உள்பட மொத்தம் 125 வீரர்கள் கடலோர மார்க்கமாக 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமார் 6500 கி.மீ. தூரத்தை கடந்து வரும் 31ம்தேதி கன்னியாகுமரியில் தங்களது பேரணியை நிறைவு செய்ய உள்ளனர். இந்த பயணத்தின் போது கடலோர பொதுமக்களிடம் போதை பொருட்கள் கடத்தல் மற்றும் ஆயுத கடத்தல் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். வருகிற 31ம் தேதி கன்னியாகுமரியில் நடக்கும் நிறைவு விழாவையொட்டி, மத்திய தொழிற்பாதுகாப்பு படை சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் கன்னியாகுமரி கடற்கரையில் நடக்க உள்ளன. இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கலந்து கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், மத்திய தொழில் பாதுகாப்பு படையின் தென் மண்டல ஐ.ஜி.சரவணன் நேற்று கன்னியாகுமரி வந்தார். அவர் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம்,அரசுவிருந்தினர் மாளிகையில் உள்ள ஹெலிகாப்டர் இறங்குதளம் உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இது குறித்து குமரி மாவட்ட அதிகாரிகளிடம் கேட்ட போது, 'அமித்ஷா வருகை தொடர்பாக இன்னும் உறுதியான தகவல் எதுவும் வரவில்லை' என்றனர்.

# ஹைபர் லூப் திட்டத்துக்கான எலக்ட்ரானிக்ஸ் தொழில்நுட்பம் ஐ.சி.எப்.பில் மேம்படுத்தப்படும்: ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்

சென்னை, மார்ச்.17

இந்திய தொழில்நுட்பக் கழகம், ஐஐடி மெட்ராஸ், தையூர் வளாகத்தில் உள்ள ஹைப்பர் லூப் சோதனை அலகை ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேற்று பார்வையிட்டார். சென்னை ஐஐடி வளாகத்தில் அமைந்துள்ள 410 மீட்டர் நீளமுள்ள ஹைப்பர்லூப் சோதனை குழாய் ஆசியாவிலேயே மிக நீளமானது. இது செயல்படுவது பற்றிய செயல்முறை விளக்கம் அமைச்சருக்கு செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:



ஹைப்பர் லூப் போக்குவரத்துக்கான சோதனை அமைப்பு முழுவதும் நமது உள்நாட்டு தொழில்நுட்பத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக நமது இளம் கண்டுபிடிப்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். தற்பொழுது வளர்ந்து வரும் ஹைப்பர் லூப் போக்குவரத்து தொழில்நுட்பம், இதுவரையிலான சோதனைகளில் நல்ல பலன்கள் வந்துள்ளன. விரைவில் ஹைப்பர் லூப் போக்குவரத்துக்கு இந்தியா தயாராகிவிடும்.

இதுவரை ஒன்றிய அரசின் ரயில்வே அமைச்சகம் ஹைப்பர் லூப் திட்டத்துக்கு நிதி உதவியும் தொழில்நுட்ப உதவியும் வழங்கி வந்தது. தற்போது ஹைப்பர் லூப் திட்டத்தின் எலக்ட்ரானிக்ஸ் தொழில்நுட்பம் முழுவதும் சென்னை ஐசிஎப்பில் மேம்படுத்தப்படும். ஐசிஎப் தொழிற்சாலையில் திறமையான வல்லுனர்கள் வந்தே பாரத் அதிவிரைவு ரயில்களுக்கான பெரிய சவாலான அதிக திறனுள்ள எலக்ட்ரானிக்ஸ் அமைப்புகளை திறம்பட மேம்படுத்தியுள்ளனர். ஹைப்பர்லூப் திட்டத்திற்கான எலக்ட்ரானிக்ஸ் தொழில்நுட்பமும் ஐசிஎப்பில் மேம்படுத்தப்படும். ஐஐடி சென்னையின் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கும் அவிஷ்கர் நிறுவனத்துக்கும் பாராட்டுகள். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் கிண்டியில் உள்ள சென்னை ஐஐடி வளாகத்திற்கு வந்த அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஐஐடியின் புதிய கண்டுபிடிப்புகளுக்கான மையம் சார்பில் நடந்த கண்காட்சியை பார்வையிட்டு மாணவர்கள் மற்றும் இளம் கண்டுபிடிப்பாளர்களிடையே கலந்துரையாடினார். அப்போது, பிரதமர் மோடி தலைமையில் அனைத்து துறைகளிலும் முன்னணி நாடாக விளங்கும் வகையில் இந்தியா செயல்பட்டு வருகிறது. தரவு அறிவியல், செயற்கை தொழில்நுட்பம் மற்றும் குறைக்கடத்தி (செமி கண்டக்டர்) ஆகிய துறைகளில் நமது இளைஞர்கள் திறமையாக செயல்பட்டு வருகின்றனர்.

உலகிலேயே இந்தியாவில்தான் திறமையான இளைஞர்கள் அதிகம் உள்ளனர். இவர்கள் இந்தியாவை ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற பெரிதும் பங்காற்றுவார்கள். இந்தாண்டு இறுதிக்குள் இந்தியாவில் தயாரான முதலாவது குறைக்கடத்தி பயன்பாட்டுக்கு வரும் என்றார். தொடர்ந்து, கண்காட்சியில் இடம்பெற்ற கண்டுபிடிப்புகளுக்கான போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு அமைச்சர் பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் சென்னை ஐஐடியின் இயக்குனர் காமகோட்டி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# நிலவுக்கு ரோபோக்கள் அனுப்பி வைக்கப்படும் ஜப்பானுடன் இணைந்து சந்திரயான்5 திட்டம்: இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்

நாகர்கோவில், மார்ச்.17

ஜப்பான் மற்றும் இந்தியா இணைந்து சந்திரயான்5 திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த திட்டத்தின் மூலம் மனிதர்கள் இல்லாமல் ரோபோக்கள் நிலவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.



இஸ்ரோதலைவர் நாராயணன் நேற்று நாகர்கோவில் வந்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியது: இந்த ஆண்டு ஜனவரி மாதம் 16ம் தேதியன்று விண்வெளியில் நாம் இரண்டு செயற்கைகோள்களை அனுப்பினோம். அவற்றை டாக்கிங் என்ற முறையில் செயற்கைக்கோள்களை ஒன்றாக சேர்த்து, தற்போது வெற்றிகரமாக இரண்டும் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. இது போன்ற பரிசோதனை மேற்கொண்டு வெற்றி கண்டதில் இந்தியா 4வது நாடாகும். 9,800 கிலோ எடை கொண்ட சந்திரயான் 4 செயற்கைக்கோள் விண்ணில் அனுப்பப்பட இருக்கிறது.

அதனை இரண்டு ராக்கெட்டுகள் மூலம் அனுப்பி வைத்து, நிலவில் தரையிறங்க செய்து, அங்குள்ள கனிமங்களை சேகரித்து மீண்டும் பூமிக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. வருங்காலத்தில் நிலவிற்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்திற்காக, ஆளில்லா சிறிய சிறிய ராக்கெட்டுகள் தயாரித்து, அதில் ரோபோக்கள் அனுப்பி சோதனை நடத்தப்பட உள்ளது. ஜப்பான் மற்றும் இந்தியா இணைந்து சந்திரயான்5 திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த திட்டத்தின் மூலம் மனிதர்கள் இல்லாமல் ரோபோக்கள் நிலவுக்கு அனுப்பி வைக்கப்படும். மகேந்திரகிரியில் அதிநவீன செயற்கைக்கோள் மற்றும் ராக்கெட்டுகள் தயாரிப்பு தொடர்பான ஆய்வுகள் நடக்கிறது. அதன் மூலம் பல சாதனைகள் படைப்போம்.

விண்ணில் உள்ள வெப்ப நிலைகள் மற்றும் அதில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கான அதிநவீன தொழில்நுட்பத்தில் 'நாசி ப்ரொடெக்டிவ் சிஸ்டம்' சிறந்த முறையில் வெற்றி கண்டுள்ளது. செவ்வாய் கோளுக்கு மார்ஸ் ஆர்பிட் மிஷன் மூலம் அனுப்பப்பட்ட விண்கலம் 68 கோடி கிலோமீட்டர் தூரம் பயணித்து 294 நாட்கள் கழித்து அதில் உள்ள எந்திரங்களை செயல்பட செய்தோம். அது வெற்றிகரமாக செயல்பட தொடங்கியதை தொடர்ந்து உலகில் முதன்முதலில் பரிசோதனையில் வெற்றி கண்டது இந்தியா தான் என்ற பெருமை உள்ளது. வேறு எந்த நாட்டிற்கும் இந்த பெருமை கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஒட்டுமொத்த விவசாயிகள் பயனடைகிற வகையில் நிதிநிலை அறிக்கை: செல்வப்பெருந்தகை பாராட்டு

சென்னை, மார்ச்.17

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:



தமிழ்நாடு அரசின் 202526 ஆம் ஆண்டிற்கானவேளாண்நிதிநிலை அறிக்கையை வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ரூபாய் 45,661 கோடிக்கு நிதி ஒதுக்கி சமர்ப்பித்திருக்கிறார். இதில் விவசாயிகள் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாயிகள் பெற்ற கடனைதள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை கோரி விவசாயிகள் பல ஆண்டுகளாக போராடி வருகிறார்கள்.

ஆனால், விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்வதற்கோ, பயிர்க் கடனை தள்ளுபடி செய்வதற்கோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால், தமிழ்நாடு அரசு விவசாய பயிர்க்கடன் தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் தற்போது வரை ரூபாய் 10,341 கோடி தள்ளுபடி செய்துள்ளது. வரும் நிதியாண்டில் ரூபாய் 1427 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் தெளிவான விவசாயக் கொள்கையின் காரணமாக தமிழ்நாட்டின் சாகுபடி பரப்பு 151 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. தி.மு.கழக அரசு செயல்படுத்திய திட்டங்களினால் 346 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுளில் 1.86 லட்சம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி வந்தது நடைமுறையில் உள்ளதால் புதிய மின் இணைப்புகள் மறுக்கப்பட்டு வந்தன. ஆனால், தற்போது மின் இணைப்புகள் வழங்கப்பட்டு விவசாயிகளுக்கு பாசன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, விவசாயிகளுக்கு பயிர்க்கடன் அளவு கடந்த ஆண்டு 1.83 லட்சம் கோடியாக இருந்தது, நடப்பாண்டில் 3.58 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

விவசாயிகளுக்கு கடன் வழங்குவதால் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உள்ளது. அதேபோல, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் நேரடி கொள்முதல்செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு நியாய விலை கிடைப்பதால் நெல் உற்பத்தியில் தமிழ்நாடு மகத்தான சாதனை செய்து வருகிறது. 30 லட்சம் விவசாயிகளுக்கு கடந்த 4 ஆண்டுகளில் பயிர்காப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. 4 ஆண்டுகளில் நெல் விவசாயிகளுக்கு ரூபாய் 1452 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 215 ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த விவசாயிகள் பயனடைகிற வகையில் உறுதியான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துகிற வகையில் வேளாண் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்ததற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினையும் , வேளாண்மை துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வத்தையும்பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

17.3.2025

# துணை கலெக்டர், டிஎஸ்பி பதவி குரூப் 1 மெயின் தேர்வு ரிசல்ட் வெளியீடு

சென்னை, மார்ச்.17

துணை கலெக்டர், துணை காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட 90 பதவிகளுக்கான குரூப் 1 மெயின் தேர்வுக்கான ரிசல்ட்டை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்(டிஎன்பிஎஸ்சி) குரூப் 1 பதவியில் காலியாக உள்ள துணை கலெக்டர் 16 இடங்கள், துணை காவல் கண்காணிப்பாளர்(டிஎஸ்பி) 23, வணிகவரித்துறை உதவி ஆணையர்14, கூட்டுறவு துறை துணை பதிவாளர் 21, ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் 14, மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி 1, மாவட்ட தீயணைப்பு துறை அதிகாரி ஒரு பணியிடம் என 90 இடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை கடந்த ஆண்டு மார்ச் 28ம் தேதி வெளியிட்டது.

இத்தேர்வுக்கான முதல் நிலை தேர்வு கடந்த ஆண்டு ஜூலை 13ம் தேதி நடைபெற்றது. இத்தேர்வை1லட்சத்து59,973 பேர் எழுதினர். அவர்களுக்கான தேர்வு முடிவு கடந்த ஆண்டு செப்டம்பர்2ம் தேதி வெளியானது. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில் 1,888 பேர் அடுத்தகட்டமாக முதன்மைத் தேர்வை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 10, 11, 12 மற்றும் 13ம்தேதிகளில்எழுதினர். அந்த தேர்வு முடிவை டிஎன்பிஎஸ்சி. வெளியிட்டுள்ளது. 1,888 பேர் எழுதியதில், 190 பேர் வெற்றி பெற்று இருப்பதாக டி.என்.பி.எஸ்.சி. தனது இணையதளமான (www.tnpsc.gov.in) வெளியிட்டுள்ளது. தற்போது நேரடி சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களுக்கு ஏப்ரல் 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை சென்னையில் உள்ள டிஎன்பிஎஸ்சி அலுவலகத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்படும். தேர்வர்கள் அனைத்து சான்றிதழ்களுடன் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும். சான்றிதழ்சரிபார்ப்பு,நேர்முகத் தேர்வின் தேதி மற்றும் நேரம் குறித்த தனிப்பட்ட தகவல் தேர்வாளர்களின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும் என்று டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

# சார்பதிவாளர் அலுவலகங்களில் இன்று கூடுதல் டோக்கன்

சென்னை, மார்ச்.17




பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று சார்பதிவாளர் அலுவலகங்களில் நாளை கூடுதல் டோக்கன் வழங்கப்படும் என பதிவுத்துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து பதிவுத் துறை வெளியிட்ட அறிக்கை: பங்குனி மாதத்தின் மங்களகரமான தினமான மார்ச் 17ம் தேதி அதிகளவில் பத்திர பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. இதனை ஏற்று மார்ச் 17ம் தேதி அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு எற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

# ரூ.13.80 கோடியில் 2,925 கி.மீ வாய்க்கால்கள் தூர்வாரப்படும்

சென்னை, மார்ச்.17

வேளாண் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது: பாசனநீரை தங்கு தடையின்றிக் கொண்டு செல்லவும், மழைக்காலங்களில் பெரும்பாலான மழைநீர் வயல்களில் நிரம்பி பயிர் சேதம் ஏற்படுவதைத் தடுக்கவும், கடைமடை உழவர்களுக்கு போதுமான நீர் உரிய நேரத்தில் சென்றடையவும், கடந்த மூன்று ஆண்டுகளாக 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளின் முக்கியத்துவம் கருதி 202526ம் ஆண்டிலும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர், திருச்சி மாவட்டங்களில் காவேரி, வெண்ணாறு, வெள்ளாறு வடிநிலப் பகுதிகளிலும், கல்லணை கால்வாய் பாசனப் பகுதிகளிலும் உள்ள "சி" மற்றும் "டி" பிரிவு வாய்க்கால்களில் 2,925 கிலோ மீட்டர் நீளத்திற்கு 13 கோடியே 80 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு "ஆறோடும் மண்ணில் எங்கும் நீரோடும்" நிலை ஏற்படுத்தப்படும்.



# 'ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்' மூலம் 46,000 ஏக்கர் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றம்: வேளாண்துறை செயலாளர் தட்சிணாமூர்த்தி பேட்டி

சென்னை, மார்ச்.17



ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் 4 ஆண்டுகளில் 46 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டு ஏராளமான விவசாயிகள் பயனடைந்துள்ளதாக வேளாண் துறை செயலாளர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். 202526ம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை விளக்கம் தொடர்பாக, சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் வேளாண் துறை செயலாளர் தட்சிணாமூர்த்தி நிருபர்களிடம் பேசியதாவது: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பயிர் பாதிப்புகளை தடுப்பதற்கான ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தாண்டு முதல் ஆராய்ச்சி செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஏற்படும் வெப்பம், குளிர், மழை போன்ற காலநிலைகளை விவசாயிகளிடம் கூறும் விதமாக கிராமங்களில் செயல் விளக்கங்கள் போல எடுத்துரைக்க உள்ளோம். பருவமழைகாலங்களில் பயிர்களை பாதுகாப்பது தொடர்பான அறிவுரைகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம்.

இந்தாண்டும் தோட்டக்கலைத்துறைக்கெனதனித்துவமாக முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். வேளாண் பொருட்களை பொறுத்தவரை சில முக்கிமான பொருட்களுக்கு ஆதார விலை என்பது இருந்து வருகிறது. அந்தவகையில் விளைப்பொருட்களை வாங்குபவர்களுக்கும் கஷ்டமில்லாமல்; விற்பனை செய்பவருக்கும் கஷ்டமில்லாமல் எந்த அளவிற்கு தேவையோ அவ்வாறு உற்பத்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுப்போம். அதேபோல், பனைமரத்தின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பனைமரத்தின் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்கவும் வேளாண் துறையில் சிறப்பு திட்டம் உள்ளது.

அதன்படி, தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து தயாரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். குறிப்பாக, விதை உற்பத்தி செய்வதற்கு இந்த நிறுவனத்திடம் இருந்து வாங்குகிறோம். அதேபோல் பொருளீட்டு கடன் கொடுக்கிறோம். வேளாண் சந்தையில் அவர்களுடைய பங்களிப்பு மிக முக்கியமான ஒன்றாக உள்ளது. வேளாண் துறை சார்ந்து படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு ஆன்லைன் மூலம் பதிவு செய்து அதனை பரிசீலனை செய்து அவர்கள் கடை வைப்பதற்கு, விதை மற்றும் உரம் விற்பனை செய்வதற்கான உரிமம் உள்ளிட்டவைகளை வேளாண் துறை மூலமாக அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறோம்.

அதேபோல், ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் மூலமாக 46 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு விவசாயிகளின் கோரிக்கைகளான டெல்டா இல்லா மாவட்டங்களுக்கு சிறப்பு தொகுப்பு திட்டம், இயற்கை வேளாண்மை பரவலாக்க திட்டம் போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தற்போது இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளோம். அந்தவகையில் விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை தான் தற்போது செயல்படுத்த உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்செந்தூரில் 50 அடிக்கு உள்வாங்கிய கடல்

திருச்செந்தூர், மார்ச்.17



அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்களில் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் முருகன்கோயில்கடற்கரையில் கடல் உள்வாங்குவதும், இயல்பு நிலைக்கு திரும்புவதும் வாடிக்கையாகி விட்டது. கடந்த மார்ச் 13ம் தேதி முதல் மார்ச் 14ம் தேதி வரை பவுர்ணமி இருந்தது.

இதன் காரணமாக நேற்று கோயில் அருகே சுமார் 50 அடி தூரம் கடல் உள்வாங்கி பச்சைப்பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தது. இருந்தபோதிலும் பக்தர்கள் வழக்கம்போல கடலில் நீராடினர்.




# விரைவில் 'டிடி நெக்ஸ்ட் லெவல் அப்டேட் சந்தானம்

கோலிவுட்டில் நகைச்சுவை நடிகராக அறிமுகமாகி, இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக வளர்ந்திருப்பவர் சந்தானம். 2016ல் சந்தானம் நடிப்பில் வெளிவந்த 'தில்லுக்கு துட்டு', 2023ல் வெளிவந்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' ஆகிய படங்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. அதனை தொடர்ந்து இதன் மூன்றாம் பாகமாக 'டிடி நெக்ஸ்ட் லெவல்' உருவாகி உள்ளது.

ஆர்யாவின் தயாரிப்பில் உருவாகும் இந்த படத்தை பிரேம் ஆனந்த் இயக்கியுள்ளார். இதில் சந்தானத்துடன் இணைந்து கஸ்தூரி, செல்வராகவன், கவுதம் வாசுதேவ் மேனன், மொட்டை ராஜேந்திரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. இப்படம் மே மாதம் வெளியாக உள்ள நிலையில், இப்படபுகைப்படத்தைபகிர்ந்துவிரைவில்அப்டேட்டுகள்வெளியாகும்என்றுசந்தானம்தெரிவித்திருக்கிறார்.

# "கிங்டம்" டீசர் டிராக் ரிலீஸ் தேதியை அறிவித்த அனிருத்




தெலுங்குசினிமாவில்முன்னணிநடிகராகவலம்வருபவர் விஜய் தேவரகொண்டா. இவர் கீதா கோவிந்தம், அர்ஜுன் ரெட்டி உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தவர். இவர் கடைசியாக 'பேமிலி ஸ்டார்' திரைப்படத்தில் நடித்திருந்தார்.

விஜய் தேவரகொண்டா தன்னுடைய 12வது திரைப்படத்தில் நடித்து வருகிறார். தற்காலிகமாக 'விடி12' எனப்பெயரிடப்பட்டுள்ளஇந்தபடத்தைகவுதம்தின்னனுரி இயக்குகிறார். இந்த படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட், பார்ச்சூன் போர் சினிமாஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்து இருக்கிறது. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். மேலும் இந்த படத்தில் நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தின் டைட்டில் டீசர் வெளியானது. அதன்படி இப்படத்திற்கு 'கிங்டம்' என பெயரிடப்பட்டுள்ளது. இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது. இந்த டீசருக்கு தமிழில் சூர்யாவும், தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆரும், இந்தியில் ரன்பீர் கபூரும் குரல் கொடுத்துள்ளனர். இப்படம் வரும் 30ம் தேதி திரைக்கு வர தயாராகி வருகிறது.

'ஜெர்ஸி' படத்தின் இயக்குநர் கௌதம் தின்னனுரி கிங்டம் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தை சித்தாரா என்டர்டெயின்மெண்ட் மற்றும் பார்ச்சூன் போர் சினிமாஸ் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளது.

இந்நிலையில், 'கிங்டம்' படத்தின் டீசர் டிராக் வரும் 17ம் தேதி மாலை 6:03 மணிக்கு வெளியாகும் என இசையமைப்பாளர் அனிருத் அறிவித்துள்ளார்.

# கூலி படத்தின் ஓ.டி.டி உரிமையை பெற்ற பிரபல நிறுவனம்.. இத்தனை கோடியா?




நடிகர் ரஜினிகாந்தின் 171வது திரைப்படமான 'கூலி' பான் இந்தியா படமாக உருவாகி வருகிறது. இந்த படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். இந்த படத்தில் சவுபின் ஷாயிர், நாகார்ஜுனா, சத்யராஜ், உபேந்திரா, சுருதிஹாசன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். அதுமட்டுமில்லாமல் பூஜா ஹெக்டே இந்த படத்தில் குத்து பாடல் ஒன்றுக்கு நடனமாடியுள்ளார். சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஐதராபாத், சென்னை மற்றும் பாங்காக் ஆகிய பகுதிகளில் நடைபெற்றது. தற்போது இப்படத்தின் ஒட்டுமொத்தபடப்பிடிப்புபணிகளும்நிறைவடைந்துள்ளதாககூறப்படுகிறது. படத்தின்பின்னணிவேலைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த படமானது ஆகஸ்ட் மாதம் அல்லது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், படத்தின் டீசர் எப்போது வெளியாகும் என ரசிகர்கள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் இப்படத்தின் ஓ.டி.டி உரிமை பிரபல நிறுவனம் மிகப்பெரிய தொகை கொடுத்து வாங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதாவது, கூலி படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் உரிமையை பிரபல நிறுவனமான அமேசான் பிரைம் சுமார் ரூ.120 கோடி கொடுத்து வாங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இது அதிகாரப்பூர்வமான தகவல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இண்டியன்வெல்ஸ் டென்னிஸ்; ஹோல்கர் ரூனே இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்



இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்றுநடைபெற்றஅரையிறுதிஆட்டம்ஒன்றில்ஹோல்கர்ரூனே(டென்மார்க்) டேனியல் மெத்வதேவ் (ரஷியா) ஆகியோர் மோதினர்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்ட ஹோல்கர் ரூனே 75, 64 என்ற செட் கணக்கில் டேனியல் மெத்வதேவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல். 2025: ஐதராபாத் அணியில் இணையும் நிதிஷ் குமார் ரெட்டி




இந்திய அணியில் இளம் நட்சத்திர ஆல் ரவுண்டர் நிதிஷ் குமார் ரெட்டி (வயது 21). இவர் கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான 2வது 20 ஓவர் போட்டிக்கு தயாராக பயிற்சியில் ஈடுபட்ட போது வயிற்று பகுதியில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக தொடரில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் அவர் எந்தவித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடவில்லை.

இதையடுத்து அவர் காயத்தில் இருந்து மீண்டு வருவதற்கான பயிற்சி நடைமுறைகளை பெங்களூருவில் உள்ள இந்திய கிரிக்கெட் வாரிய சிறப்பு மையத்தில் மேற்கொண்டார். இந்நிலையில், தற்போது நிதிஷ் குமார் ரெட்டி முழு உடல் தகுதியை பெற்றுள்ளார். யோயோ டெஸ்ட் உள்ளிட்ட சோதனையில் தேர்ச்சி பெற்ற அவர் விளையாட இந்திய கிரிக்கெட் வாரிய மருத்துவ கமிட்டி அனுமதி அளித்துள்ளது.


இதனால் அவர் ஐ.பி.எல். போட்டியில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியினருடன் விரைவில் இணைகிறார். 21 வயதான அவரை ஐதராபாத் அணி நிர்வாகம் கடந்த ஆண்டு ஏலத்துக்கு முன்னதாக ரூ.6 கோடிக்கு தக்கவைத்தது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று: பிரேசில் அணியில் இருந்து நெய்மார் விலகல்

பிரேசில் கால்பந்து அணியின் முன்னணி வீரரான நெய்மார் 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த உருகுவேக்கு எதிரான ஆட்டத்தில் இடது முழங்காலில் காயம் அடைந்தார். அதன் பிறகு அவர் பிரேசில் அணிக்காக விளையாடவில்லை.

இந்நிலையில், 2026ம் ஆண்டு உலக கோப்பை கால்பந்து போட்டிக்கான தென் அமெரிக்க கண்டத்துக்குரிய அணிகளுக்கான தகுதி சுற்றில் பிரேசில் அணி உள்ளூரில் வருகிற 20ந் தேதி கொலம்பியாவையும், 25ந் தேதி அர்ஜென்டினாவை அதன் சொந்த மண்ணிலும் எதிர்கொள்கிறது.

இந்த போட்டிக்கான பிரேசில் கால்பந்து அணியில் முன்கள வீரரான நெய்மார் இடம் பிடித்து இருந்தார். இந்த நிலையில் 33 வயதான நெய்மார் சான்டோஸ் கிளப்புக்காக கடந்த வாரம் விளையாடினார். அப்போது அவருக்கு தொடையில் காயம் ஏற்பட்டதாகவும், அதில் இருந்து மீண்டு முழு உடல் தகுதியை எட்டவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் உலகக் கோப்பை தகுதி சுற்றுக்கான பிரேசில் அணியில் இருந்து நெய்மார் விலகி இருக்கிறார். நட்சத்திர வீரர் நெய்மார் விலகல் அந்த அணிக்கு ஒரு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.



NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.